# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 1/2022** **நாள்: 05.01.2022**

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வேட்பு மனு தாக்கல் செய்வதை சிசிடிவி மூலம் பதிவு செய்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்டவை குறித்து இன்று (05.01.2022) காணொலி காட்சி மூலம் ஆய்வு.**

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு சாதாரணத் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாகவும் வாக்குச்சாவடி மையங்களுக்கு சிசிடிவி கேமரா பொருத்துதல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையில், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (05.01.2022) காணொலிக் காட்சி வாயிலாக (Video Conferencing) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில், கீழ்க்கண்ட செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- இந்திய தேர்தல் ஆணையத்தால் 5.1.2022 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு சுருக்க திருத்த வாக்காளர் பட்டியல்கள் (Final SSR 2022) தேர்தல் (பொது) பிரிவிலிருந்து பெறுதல்.

- புதிதாக வார்டு மறுவரையறை/தரம் உயர்த்தப்பட்ட 4 மாநகராட்சிகள், 28 நகராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சி தேர்தல்களுக்கு வாக்குச்சாவடிகள் தயார் செய்யப்பட்ட விவரம் மற்றும் தொடர்புப்படுத்தும் விவரப்பட்டியல் தயார் செய்த விவரம்

- தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நியமனம் செய்தல்.

- உயர்நீதிமன்ற உத்தரவுப்படி வேட்பு மனு தாக்கல் செய்வதை சிசிடிவி மூலம் பதிவு செய்தல்.

- வாக்குச்சாவடி மையங்களுக்கு சிசிடிவி பொருத்துதல் விவரம்

..2..

- வாக்குச்சாவடி மையங்களுக்கு கோவிட்-19 தொடர்பான பாதுகாப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்தல்

- வாக்குச்சாவடி மையங்களில் உடல் ஊனமுற்றவர்கள் வாக்களிக்கும் வகையில் சாய்தள நடைமேடை அமைத்தல் மற்றும் சக்கர நாற்காலி ஏற்பாடு செய்தல்.

- மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டார தேர்தல் மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்தல்.

- அனைத்து வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உட்பட 100% கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்பட்டதை உறுதி செய்தல்.

- பறக்கும்படை நியமனம் செய்யப்பட்ட விவரம்.

- அஞ்சல் வாக்குகள் தேவை விவரம்

- மின்னணு வாக்குப்பதிவு முதல் நிலை Randomization செய்த விவரம்

- பதற்றமான வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மையம் இறுதி செய்தல்

இக்கூட்டத்தில், மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு பா. பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு விசுமகாஜன், இ.ஆ.ப., காவல் கண்காணிப்பாளர் (நில அபகரிப்பு பிரிவு) திரு டி. மகேஷ்குமார், இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி.அ. சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார், மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

5/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்